Regd with the Registrar of Newspapers for India No. TN TAM/2007/22101
Regd. TN/CC(S)Dn/326/13-15


## வேத ஆராய்ச்சி பாடங்கள்

வாரந்தோறும் – திங்கள் கிழமைகளில்
மாலை – 6.30 மணி முதல் 8.30 மணி வரை
இடம் : ஏ-4, டேஜு ப்ளாசா
2, தெற்கு அவென்யூ
ஸ்ரீநகர் காலனி
சைதாப்பேட்டை
சென்னை – 600 015
(சைதாப்பேட்டை கோர்ட் அருகில்)

வேதத்தின் ஆழங்களைப் படித்து தெரிந்துகொள்ளவேண்டும்
என்று வாஞ்சிப்பவர்கள் இதில் கலந்து கொள்ளலாம்










Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# எக்காளம்

Vol. 6
Issue. 6

தனிப்பிரதி ரூ20/=
பிப்ரவரி 2013






கர்த்தருக்கு பயப்படுவது என்பது கர்த்தருக்கு அஞ்சுவதோ அல்லது பயப்படுவதோ அல்ல. கர்த்தரைப் பற்றிய உணர்வே கர்த்தருக்கு பயப்படுவதாகும். மிருகம் மற்றும் சூழ்நிலை நம்மை அழித்துவிடுமோ என்று நினைப்பது பயப்படுதலாகும். ஆனால், கர்த்தரோ தாய், தகப்பன் மற்றும் எல்லோரைக் காட்டிலும் நம்மை மிகவும் நேசிப்பவர். பாவமன்னிப்பை பெறாதவன் அல்லது இரட்சிக்கப்படாதவன் தனது மனசாட்சி சொல்வதைக்கேட்டு பாவத்துக்கு விலகியிருப்பான். இரட்சிக்கப்பட்டவர்களோ, கர்த்தரைக் குறித்த உணர்வினால் பாவத்திற்கு விலகியிருப்பார்கள்.

**பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக; உலகத்திலுள்ள குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக** (சங்கீதம் *33:8*). நம் கர்த்தர் பெரியவர், உயர்ந்தவர், சர்வவல்லமையுள்ளவர். சகலத்தையும் ஆளுகை செய்கிறவர். அவர் வானத்தையும் பூமியையும் அதில் இருக்கிற யாவற்றையும், மனிதனையும் உண்டாக்கினவர். ஆகையால் பூமியில் உள்ள ஜனங்கள் எல்லோரும் அவருக்கு பயந்து வாழ வேண்டும். நம் தேவன் மகா பரிசுத்தமுள்ளவர். நாமும் அவரைப்போல பரிசுத்தமாய், பாவத்திற்கு விலகி வாழ விரும்புகிறார். மனிதனின் உள்ளந்திரியங்களையும், இருதயத்தையும் ஆராய்ந்து அறிகிறவர். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. நாம் பாவம் செய்யாமல் கர்த்தருக்கு பயந்து வாழவே நம் தேவன் விரும்புகிறார்.

**கிருபையினாலும், சத்தியத்தினாலும், பாவம் நிவிர்த்தியாகும்; கர்த்தருக்கு பயப்படுகிறதினால் மனுஷர் தீமையை விட்டு விலகுவார்கள்** (நீதிமொழிகள் *16:6*). நாம் செய்த தவறை உணர்ந்து மனந்திரும்பும்போது தேவனுடைய அன்பினாலும், உண்மையினாலும், பரிசுத்தமாக்கப்படுகிறோம். தேவன் நம்மேல் வைத்த அன்பினாலே, நாம் எல்லோரும் செய்த பாவங்களுக்காக தம்மையே ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தார். நம் பாவங்களை அவருடைய பரிசுத்த இரத்தத்தினால் கழுவி, நம்மை பரிசுத்தப்படுத்திவிடுகிறார். நாம் செய்த பாவங்களுக்கும், அக்கிரமங்களுக்கும் தக்கதாக தண்டனை கொடுக்காமல் அவருடைய கிருபையினாலே இரட்சிப்பைக் கொடுக்கிறார். **கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு** (எபேசியர் *2:8*).

கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் சோதனைகள் வரும்போது, பாவம் செய்யாமல் அதற்கு விலக்கி தங்களை பாதுகாத்துக் கொள்வார்கள். பாவம் செய்வதற்கான சூழ்நிலை வந்தாலும் பாவத்திற்கு இடங்கொடுக்கமாட்டார்கள்.

**ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிறான்; மதிகேடனோ மூர்க்கங்கொண்டு துணிகரமாயிருக்கிறான்** (நீதிமொழிகள் *14:16*). இதை எளிய வேதாகமம் இவ்வாறு கூறுகிறது: ''அறிவுள்ளவன் கர்த்தரை மதித்து, தீயவற்றிலிருந்து விலகி இருப்பான். ஆனால், அறிவற்றவனோ, எதையும் சிந்திக்காமல் செய்வான். எச்சரிக்கையாக இருக்கமாட்டான்''. மற்றவர்களுக்கு துன்பத்தை விளைவிக்கும் காரியங்களைச் செய்தால் நாம் நன்றாக வாழ முடியாது என்பதை ஞானமுள்ளவர்கள் அறிந்து, எப்பொழுதும் எச்சரிக்கையோடு இருப்பார்கள். ஞானமில்லாதவர்களோ எதிர்காலத்தில் நடப்பதைப்பற்றி யோசிக்காமல் அகந்தையோடு நடந்து கொள்வார்கள்.

**ஆண்டவருக்கு பயப்படுவதே ஞானம்: பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி** (யோபு *28:28*). ஆண்டவருக்கு பயந்து தீமையை விட்டு விலகி வாழ்வதே ஞானம் என்று யோபு கூறுகிறான். **யோபு உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்** (யோபு *1:1*). தன் பிள்ளைகளையும் கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் வளர்த்தான். பாவத்துக்கு விலகி வாழும்படி போதித்தான். கர்த்தர் அவனையும், அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைத்து பாதுகாத்தார். அவன் செல்வச் சீமானாய் இருந்தான். சாத்தான் அவனை சோதித்தபோது, ஆஸ்திகள், மிருகஜீவன்கள், பிள்ளைகள் எல்லாவற்றையும் இழந்து போனான். பின் சாத்தான் யோபின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் வாதித்தான். அப்பொழுதும் அவன் பாவம் செய்யவில்லை. அவன் மனைவி அவனிடம் நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்று சொன்னாள். அவன் கர்த்தருக்கு பயந்து வாழ்ந்ததினால் சோதனைகள் வந்தபோதும் பொறுமையாயிருந்து, பாவத்திற்கு இடங்கொடாமல் பரிசுத்தமாய் வாழ்ந்தான். அதனால் கர்த்தரிடமிருந்து இரட்டிப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். யோபுவைப்போல பூமியில் ஒருவனும் இல்லை என்று கர்த்தரே சாட்சி கொடுக்கிறார்.

யோபு கர்த்தருக்கு பயந்து வாழ்ந்ததால் கர்த்தருக்கு விரோதமாக பேசவில்லை. தன் கண்களினால்



பாவஞ்செய்யவில்லை. எந்தகெட்ட எண்ணமும் அவனிடம் இல்லை. உதவியற்றவர்களுக்கும், ஏழைகளுக்கும் உதவி செய்தான் வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரத்தைக் கொடுத்தான் ஏழை, எளியவர்களுக்கு நியாயம் செய்தான். பணத்தை நம்பாமல் கர்த்தரையே நம்பி வாழ்ந்தான்.

**கொர்நேலியு, தேவபக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான்** (அப்போஸ்தலர் *10:2*). அவன்



தேவனுக்கு பயந்து வாழ்ந்ததுமல்லாமல், தன் குடும்பத்தாரையும் தேவனுக்கு பயப்படும் பயத்தில் வழிநடத்தினான். அவன் நீதிமானாயிருந்தான். யூத ஜனங்களெல்லாராலும் நல்லவனென்று சாட்சி பெற்றான். ஏழைகளுக்கும், தேவையோடு இருந்தவர்களுக்கும் தான தருமங்கள் செய்தான்.

**தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீயவழியையும் புரட்டு வாயையும் நான் வெறுக்கிறேன்** (நீதிமொழிகள் 8:13). கர்த்தருடைய மனது வேதனைப்படும் காரியங்களைச் செய்யாமல் இருப்பதே கர்த்தருக்கு பயப்படும் பயம். பெருமை, பிறரைவிட தன்னை மேலாகவும் முக்கியமானவராகவும் கருதுவது, தீயவழி, ஒழுக்கமில்லாமல் நடப்பது, பொய் சொல்லுவது ஆகிய காரியங்களை கர்த்தர் வெறுக்கிறார்.

**நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்கு பயந்து தீமையை விட்டு விலகு** (நீதிமொழிகள் 3:7). நாம் சுயபுத்தியை சார்ந்து இருக்காமல் கர்த்தரை சார்ந்து இருக்கவேண்டும். நம் மனது விரும்பியபடி வாழக்கூடாது. கர்த்தர்தான் நமக்கு ஞானத்தை தருகிறவர் என்ற உணர்வோடு தாழ்மையோடுகூட நடந்து கொள்ள வேண்டும். நம்மை உயர்வாகவும், மற்றவர்களை அற்பமாகவும் எண்ணக்கூடாது.

**அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை** (நீதிமொழிகள் 16:18). ஒருவனுக்கு மனமேட்டிமை வந்துவிட்டாலே அது அவனது அழிவுக்கான அடையாளமாகும். தனக்கு எல்லாம் தெரியும், தான் என்ன நினைத்தாலும் தன் இஷ்டப்படி செய்யலாம் என்ற எண்ணமே அவனை மேட்டிமைக்குள்ளாக்குகிறது. மேட்டிமை மற்றவர்களுடைய ஆலோசனையை கேட்கவிடாது. அதனால் சரியான பாதையில் செல்லாமல் அழிவைத்தேடிக் கொள்கிறான்.

**கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை** (நீதிமொழிகள் 15:33). கர்த்தருக்குரிய கனத்தை கொடுத்து, அவருக்கு கீழ்ப்படியக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுது உண்மையான ஞானத்தை பெற்றுக் கொள்ளலாம். **கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்** (நீதிமொழிகள் 1:7). தீய ஜனங்கள் உண்மையான ஞானத்தை வெறுக்கிறார்கள். தனது நம்பிக்கைகள் சரியானவை என்பதிலும், அவற்றை பிறர் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதிலும் உறுதியாய் இருப்பார்கள். வேத வார்த்தைக்கு கீழ்ப்படிய மறுப்பார்கள். பிடிவாத குணமுடையவர்களாக இருப்பார்கள். புதிதாய் கற்றுக்கொள்ள மறுப்பார்கள். சாலொமோன் இப்படிப்பட்ட குண



முடையவர்களை மூடன் என்று குறிப்படுகிறான்.

**வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து** (நீதிமொழிகள் 4:24). இருதயத்தில் உண்மை இருந்தால், நமது பேச்சிலும் உண்மை இருக்கும். ஒருமுறை ஒருவரிடம் ஒன்றை சொல்லிவிட்டு, மறுமுறை அதை மாற்றிப்பேசக்கூடாது. உள்ளதை உள்ளவாறே சொல்ல வேண்டும். உண்மைக்குப் புறம்பாகப் பேசக்கூடாது. **நீதிமானுடைய வாய் ஞானத்தை வெளிப்படுத்தும்; மாறுபாடுள்ள நாவோ அறுப்புண்டுபோம்** (நீதிமொழிகள் 10:31). **மாறுபாடான இருதயமுள்ளவன் நன்மையைக் கண்டடைவதில்லை; புரட்டு நாவுள்ளவன் தீமையில் விழுவான்** (நீதிமொழிகள் 17:20). **பொய்சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான்; பொய்களைப் பேசுகிறவன் நாசமடைவான்** (நீதிமொழி கள் 19:9).

நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். நாம் எப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுகிறோம்? இருதயத்தில் என்ன இருக்கிறதோ, அதை வாயின் வார்த்தைகள் சுட்டிக் காட்டிவிடும். பேசும் வார்த்தைகள் நம் குணநலன்களை வெளிப்படுத்துகிறது. பேசும் வார்த்தைகளில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கர்த்தர் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற உணர்வு நமக்கு வேண்டும். தேவன் வெறுக்கும் வார்த்தைகளைப் பேசாமல், கோபமாகப் பேசாமல், அவதூறு பேசாமல் இருப்போம். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, தேவனுக்கு பிரியமில்லாத காரியங்கள் நம்மைவிட்டு அகன்று போகும். ஆவியானவர் நமக்குள் வரும்போது, ஞானம், புரிந்துகொள்ளுதல், ஆலோசனை, வல்லமை, அறிவு, வழிநடத்துதல், கர்த்தருக்கு பயப்படும் பயம் தருகிறார்.

**தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்தீர்ப்பிலே கொண்டு வருவார்** (பிரசங்கி 12:13,14). தேவன் நாம் செய்யும் அனைத்தையும், நல்ல மற்றும் தீய செயல்களையும், இரகசியமான செயல்களையுங்கூட அறிந்திருக்கிறார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை. அனைத்திற்கும், அவர் நியாயம் செய்வார். பூமியில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தேவனுக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும். அப்படி கீழ்ப்படிந்து வாழ ஒவ்வொருவரும் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும். பயபக்தியோடுகூட வாழ வேண்டும். தேவனில்லாமல் வாழும் வாழ்க்கையானது பயனற்றது, வீணானது.

நாம் செய்த செயல்களுக்குத் தக்கதாக தேவனுக்கு முன்பாக நின்று நியாயந் தீர்க்கப்படுவோம். தேவன் மீது நம்பிக்கையில்லாமல், வேத வார்த்தைக்கு எதிரான ஒரு வாழ்க்கை வாழ்ந்தால், நாம் வாழ்ந்த வாழ்க்கை வீண். நல்லொழுக்கத்தோடு முறையான ஒரு வாழ்க்கையை வாழவேண்டும்.

தேவன்மீது உண்மையான பக்தியுள்ளவர்கள் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, மற்றவர்களுக்கு தாங்கள் தேவபக்தியுள்ளவர்கள் என்பதை வெளிப்படுத்துவார்கள். தேவனோடு ஐக்கியமாய் இருப்பார்கள். மற்றவர்களுக்கு முன்பாக நன்றாக ஜெபிப்பவர்களையும், உபவாசம் இருப்பவர்களையும் தேவபக்தியுள்ளவர்கள், ஜெபிப்பவர்கள் என்று எடை போடுவது தவறு. அவர்கள் வேதத்தை படிக்கிறார்களா? தேவனுடைய கட்டளை

களின்படி நடக்கிறார்களா? தேவனோடு நெருங்கி வாழ்கிறார்களா? தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்கிறார்களா? மனிதர்களுக்கு பிரியமாய் வாழ்கிறார்களா? என்பதை பாருங்கள். மற்றவர்கள், தங்களை பக்தியுள்ளவர்கள் என்று சொல்ல வேண்டும் என்பதற்காக நடிப்பவர்கள் மாய்மாலக்காரர்கள். மதத்தலைவர்களான பரிசேயரும், சதுசேயரும் தேவபக்தியுள்ளவர்களைப்போல மனுஷருக்கு முன்பாக தங்களை நீதிமான்களாக காட்டிக் கொண்டார்கள். இவர்கள் இருதயம் முழுவதும் மாயத்தினாலும் தீயக் காரியங்களினாலும் நிறைந்திருந்தது.

இயேசு கிறிஸ்து இப்படி நடிப்பவர்களை எப்படியாகக் கடிந்து கொள்கிறார் பாருங்கள்: **மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும். உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்: உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்** (மத்தேயு 23:27,28).

**ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன், பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்கு தன் உதடுகளையும் விலக்கிக் காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத்தேடி அதைப் பின் தொடரக்கடவன்; ... தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது** (1 பேதுரு 3:10-12).

கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள், அவரை நேசித்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பார்கள். இயேசு கிறிஸ்து யோவான் 14:23-24-ல் இப்படியாகக் கூறுகிறார்: **ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்; என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான்.** கர்த்தருக்கு பயந்து வாழ்கிறவர்கள் பொய் பேசமாட்டார்கள். தீய காரியங்களுக்கு விலகியிருப்பார்கள். நல்லதையே செய்வார்கள். சமாதானத்தை காத்துக்கொள்வார்கள்.

**கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்** (சங்கீதம் 128:1). கர்த்தரைப் பின்பற்றி அவர் விரும்புகிறபடி வாழ்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவனாயிருப்பான். அவனுடைய குடும்ப வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட்டதாயிருக்கும். அவன் மனைவி கனிதரும் திராட்சைக் கொடியைப் போல் இருப்பாள். அவன் பிள்ளைகள் ஒலிவமர கன்றுகளைப்போல அபிஷேகிக்கப்பட்டவர்களாயிருப்பார்கள். **கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தமமார்க்கத்தார் பாக்கியவான்கள்** (சங்கீதம் 119:1). கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்கும்போது குற்றமற்றவர்களாக, தூய்மையான ஒரு வாழ்க்கையை வாழலாம். சந்தோஷத்தோடு, சமாதானத்தோடு கூட வாழவும், உறவுமுறைகளில் சரியாய் இருக்கவும் நமக்கு உதவி செய்கிறது.

அநேகர் கர்த்தருக்கு பயந்து வாழ்கிறேன் என்று கூறுகிறார்கள். ஆனால், அவர்கள் கர்த்தருடைய வழியில் நடப்பதில்லை. அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதில்லை. கர்த்தருக்கு பயந்து நடப்பது என்பது, கர்த்தருடைய சித்தத்தை ஏற்றுக் கொண்டு அதன்படி நடப்பது. கர்த்தருக்கு பயந்து வாழாதவர்கள், உழைத்து சம்பாதித்த பணத்தை



அனுபவிக்க முடியாதபடி, மற்றவர்கள் அதை பறித்து கொண்டுபோய் விடுவார்கள். அவர்களுக்கு ஒரு நன்மையும் ஆசீர்வாதமும் கிடைக்காது. சந்தோஷத்தையும், சமாதானத்தையும் இழந்து துக்கத்தோடு இருப்பார்கள். அவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை அனுபவிக்க முடியாமல் தவிப்பார்கள்.

குடும்பத் தலைவன் கர்த்தருக்கு பயந்து வாழும்போது, அவனுடைய குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்டதாயிருக்கும். சிலர் ஆசீர்வாதம் என்றால் செல்வச்செழிப்பை மட்டும் பார்ப்பார்கள். அவர்கள் ஆத்துமா இரட்சிக்கப்படாமல் செத்துப்போயிருந்தால் என்ன பலன்? பிரியமானவனே! உன் ஆத்துமா வாழ்வதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிரு என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறான். நாம் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும். இதுவே மெய்யான ஆசீர்வாதம்.

கர்த்தருக்குப் பயந்து வாழாததால் அநேக குடும்பங்களில் சண்டைகளும், கோபமும், வாக்குவாதமும், எரிச்சலும், பொறாமையும் வருகின்றன. ஒருவருக்கொருவர் அடித்து, காயப்படுத்தி, சபித்து, கெட்டவார்த்தைகளைப் பேசி, சமாதானத்தை இழந்து வேதனையோடுகூட காணப்படுகிறார்கள். தெய்வ பயமில்லாததால், கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் துரோகம் பண்ணுகிறார்கள். ஒருவரையொருவர் தாக்கி பேசுகிறார்கள். கணவன் மனைவியையும் மனைவி கணவனையும் அடிக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் அன்பு இல்லாததே. இதைப் பார்க்கிற பிள்ளைகளும் பாதிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட குடும்பம் எப்படி ஆசீர்வதிக்கப்படும்? பெற்றோர் தேவனுக்கு பயப்படாமல் முன்மாதிரியில்லாத வாழ்க்கை வாழ்வதால், பிள்ளைகளும் அவர்களுடைய குடும்பங்களும் பாதிக்கப்படுகிறது. ஆசீர்வதிக்கப்பட முடியாமல் இருக்கிறது. இக்குடும்பங்களில் வேதவாசிப்பு, ஜெபம் இல்லை. சிலர் கடமைக்காக இரண்டு அதிகாரங்களை வாசிப்பார்கள். ஆனால், அதன்படி நடக்கமாட்டார்கள். சுயவழியில் நடந்து துணிகரமாய் பாவம் செய்வார்கள்.

**கர்த்தருக்கு பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது; அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான்; தீமை அவனை அணுகாது** (நீதிமொழிகள் 19:23). கர்த்தருக்கு பயந்து வாழ்கிறவர்கள் வாழ்க்கையில் சிக்கல்களோ, ஆபத்தான மோசமான சூழ்நிலையோ வாழ்ந்தாலும், அது அவர்களை பாதிக்காது. இடர்பாடுகள் வந்தாலும், அது அவர்களை சேதப்படுத்தாது. அதிக வேலைப் பளுவினாலும், நோயினாலும் வேதனையினாலும் நெருக்கப்பட்டாலும் அது அவர்களை சேதப்படுத்தாது. கர்த்தர் அதற்கெல்லாம் விலக்கி அவர்களை பாதுகாப்பார். ஏனென்றால் தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ்வதாலும், நீதியாய் நடந்து, எதையும் அவசரப்படாமல் சிந்தித்து செயல்படுகிறவர்களாயும் இருப்பதால், எந்தவிதமான ஆபத்துகளோ, மோசங்களோ நேரிடாதபடி கர்த்தர் அதைத் தடுத்துப் போடுவார். துன்பங்கள், உபத்திரவங்கள் வந்தாலும் கர்த்தர் அவர்களோடுகூட இருந்து, அவர்களுக்கு ஆதரவாயிருப்பார். ஆற்றி தேற்றி சமாதானமாயிருக்கும்படி செய்வார். எல்லோரும் பார்க்கும்படியாக ஆசீர்வதித்து உயர்த்துவார்.

**கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்** (சங்கீதம் 34:7). சீரியாவின் ராஜா இஸ்ரவேலுக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பித்தான். தன் ஊழியக்கார

ரோடுகூட ஆலோசனை கூட்டம் நடத்தினான். இன்ன இன்ன இடத்தில் ஒளித்திருங்கள். இஸ்ரவேலின் படைகள் வரும்போது தாக்க வேண்டும் என்றான். தேவனுடைய மனுஷனாகிய எலிசா, இஸ்ரவேல் ராஜாவிடத்தில் ஆள் அனுப்பி இன்ன இடத்திற்கு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரும். சீரியர்கள் அங்கு ஒளிந்திருக்கிறார்கள் என்று சொல்லச் சொன்னான். அப்பொழுது, இஸ்ரவேலின் ராஜா, எலிசா தன்னை எச்சரித்து, தனக்கு குறித்து சொன்ன இடத்திற்கு மனுஷரை அனுப்பிப் பார்த்து, எச்சரிக்கையாயிருந்து, இப்படி அநேகந்தரம் தன்னைக் காத்துக் கொண்டான். இந்தக் காரியத்தினிமித்தம் சீரிய ராஜாவின் இருதயம் குழம்பினது. அவன் தன் ஊழியக்காரர்களை அழைத்து, நம் திட்டத்தை இஸ்ரவேல் ராஜாவுக்கு வெளிப்படுத்திய ஒற்றன் உங்களில் யார்? என்று கேட்டான். அப்பொழுது அவன் ஊழியக்காரரில் ஒருவன், ராஜாவே, “நீங்கள் உங்கள் படுக்கையறையில் பேசுகின்ற பல இரகசியங்களையும்கூட இஸ்ரவேலில் இருக்கிற தீர்க்கதரிசியாகிய எலிசாவால் இஸ்ரவேல் ராஜாவிடம் சொல்ல முடியும் என்றான் (2 இராஜாக்கள் 6:12).

அப்பொழுது சீரிய ராஜா எலிசாவைப் பிடிக்கும்படி குதிரைகளையும், இரதங்களையும் பலத்த இராணுவத்தையும் அனுப்பினான்; அவர்கள் இரவில் பட்டணத்தை முற்றுகையிட்டனர். எலிசாவின் வேலைக்காரன் காலையில் வெளியே சென்றபோது இராணுவத்தையும், குதிரைகளையும் இரதங்களையும் கண்டு எலிசாவிடம் போய், நாம் என்ன செய்வோம் என்றான். அதற்கு எலிசா, பயப்படாதே, அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். எலிசா தன் வேலைக்காரனின் கண்கள் திறக்கும்படி ஜெபித்தான். எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும் இரதங்களினாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதை வேலைக்காரன் கண்டான் (2 இராஜாக்கள் 6:17).



இக்கட்டான வேளையில் நாமும் கர்த்தரை நோக்கி கூப்பிடும்போது கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்பி பாதுகாப்பார். நமது உதவி செய்து நமக்கு துணையாயிருப்பார். எதிரிகளின் கைக்கு விடுவிப்பார். நம்மோடிருக்கிற தேவன் பெரியவர், எதிரிகளின் பண பலத்தையோ, புய பலத்தையோ கண்டு பயப்படாதீர்கள். கர்த்தர் உங்கள் எதிரிகளின் திட்டங்கள்



நிறைவேறமுடியாதபடி, அவர்கள் குழம்பிப்போகும்படி செய்வார். நாம் கர்த்தருக்கு பயந்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவருடைய பிரசன்னத்தில் நிரம்பி வாழவேண்டும். அவரோடுகூட உள்ள உறவில் நிலைத்திருக்கவேண்டும்.

தானியேல் உண்மையுள்ளவனாக, குற்றமற்றவனாக வாழ்ந்தான். தேவனை துதித்து ஆராதிக்கிறவனாக, தினமும் மூன்றுவேளை ஜெபிக்கிறவனாக இருந்தான். தானியேலுக்குள் விசேஷித்த ஆவி இருந்தமையால் ராஜா அவனை ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக ஏற்படுத்த நினைத்தான். அதனால் மற்ற அதிகாரிகள் தானியேல்மேல் பொறாமை கொண்டனர். பொய்யாய் அவன்மேல் குற்றஞ்சாட்டி சிங்கக் கெபியில் போட வைத்தனர். தானியேல் தேவன்மேல் விசுவாசம் வைத்திருந்தபடியால் தேவன் தம்முடைய தூதனை அனுப்பி பாதுகாத்தார். சிங்கங்கள் அவனை சேதப்படுத்தாதபடி அவைகளின் வாயை தேவன் கட்டிப்போட்டார்.

தானியேல்மீது குற்றஞ்சாட்டினவர்களையும், அவர்கள் மனைவிகளையும், பிள்ளைகளையும் சிங்கக் கெபியிலே போட்டார்கள். சிங்கங்கள் அவர்கள் மேல் பாய்ந்து அவர்கள் எலும்புகளையெல்லாம் நொறுக்கிப்போட்டது. தீமை செய்தவர்கள் அதன் பலனை அனுபவித்தார்கள். நாம் யாருக்கும் தீமை செய்யாதிருப்போம்.

தானியேல்மேல் பொறாமை கொண்டவர்கள், அவன் உண்மையுள்ளவன் என்பதை அறிந்திருந்தும் அவன்மேல் பொய்யாய் குற்றஞ்சாட்டினர். பிரியமானவர்களே, உங்கள்மேல் பொய்யாய் குற்றஞ்சாட்டுகிறார்களா? செய்யாததை செய்ததாக கூறுகிறார்களா? சொல்லாத ஒன்றை சொன்னதாக கூறுகிறார்களா? நீங்கள் தவறு செய்யாதிருந்தும், தவறு செய்ததாக சொல்லுகிறார்களா? கவலைப்படாதீர்கள். அநியாயமாய் உங்கள்மேல் குற்றஞ்சாட்டும்போது கர்த்தரை நோக்கி ஜெபியுங்கள். கர்த்தர் உங்களுக்கு நியாயம் செய்வார். மற்றவர்களுக்கு தீமை செய்கிறவர்கள் அதற்கேற்ற பலனை அடைவார்கள். நாம் எதை விதைத்தோமோ அதையே அறுப்போம்.

உங்கள்மேல் பொறாமைபடுபவர்கள் உங்களுக்கு எதிராக திட்டம்பண்ணி உங்களை அழித்துப் போட நினைக்கலாம். ஆனால், கர்த்தர் உங்களோடுகூட இருந்து, அவர்கள் திட்டங்களை ஒன்றுமில்லாமல் போகச் செய்வார். மொர்தேகாயை தூக்கிலிடுவதற்கு ஆமான் தூக்குமேடையை உண்டாக்கி வைத்திருந்தான். முடிவில் அதே தூக்கு மேடையில் ஆமான் தூக்கிலிடப்பட்டான். அப்படியாக உங்களுக்கு எதிராக பொறாமைப்படுகிறவர்களுக்கும், தீமைசெய்கிறவர்களுக்கும் அவ்வாறே நேரிடும். கர்த்தருக்கு பயந்து, அவருடைய கட்டளைகளின்படி நடந்து அவருடைய சித்தத்தை செய்கிறவர்களை யாரும் தொடமுடியாது.

கர்த்தருக்கு பயப்படுகிறவர்களுக்கும், அவர்களுடைய பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு உண்டு. மரண கண்ணிகளுக்கு விலக்கி கர்த்தர் பாதுகாப்பார். அவர்களுக்கு நீடிய ஆயுளையும், சுகத்தையும் ஆரோக்கியத்தையும், ஐசுவரியத்தையும் கர்த்தர் தருவார்.

கர்த்தருக்கு அஞ்சி, அவருக்கு முன்பாக பயந்திருக்கிறவர்களே நன்றாயிருப்பார்கள் (பிரசங்கி8:12).

# நீங்கள் யாரை பிரியப்படுத்த முயற்சிக்கிறீர்கள்?

- ஏஞ்ஜலின் தீப்தி



**நீ**ங்கள் முடிவுகளை எடுக்கும்போது எது உங்களது முடிவுகளில் அதிகமாக பாதிப்பை ஏற்படுத்துகின்றது? உங்களது குடும்பமா, நண்பர்களா? உடன் வேலை பார்ப்பவர்களா அல்லது உங்களது உயரதிகாரியா அல்லது கர்த்தர் என்ன சொல்கிறார் என்பதை கவனிப்பதை நிறுத்திவிட்டீர்களா? நீங்கள் கடினமாக முயற்சி செய்து கர்த்தரைவிட மனிதரை பிரியப்படுத்துகிறீர்களென்றால், நீங்கள் உண்மையான மகிழ்ச்சியுள்ள மற்றும் திருப்தியான வாழ்க்கையை வாழாமல், போலியான வாழ்க்கையை வாழ்கின்றீர்கள். கர்த்தர் விரும்புகின்றார் என்று காரியங்களை செய்கின்றீர்களா? அல்லது ஜனங்கள் பாராட்ட வேண்டும் மற்றும் அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காகச் செய்கின்றீர்களா? உங்கள் வாழ்க்கை உண்மையானதா? அல்லது மற்றவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்ற பயத்தில் செய்கின்றீர்களா?

இது உங்களது வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் சுருங்கி போகச் செய்யும். நாம் கண்டிப்பாக வேதத்தின் வார்த்தையைப் படிக்க வேண்டும். மேலும் ஜெபிக்க வேண்டும். ஏனென்றால் நாம் விரும்புகிறோம். மத ரீதியான தேவை என்பதனால் அல்ல. மேலும், நாம் ஆலயத்திற்கு கண்டிப்பாகச் செல்லவேண்டும். ஏனென்றால் நாம் விரும்புகிறோம். நாம் அப்படி செய்யவில்லையென்றால், நம்மை பரிசுத்தமில்லாதவர்கள் என்று கருதிவிடுவார்கள் என்பதற்காக அல்ல.

இது ஏனென்றால், நமது நோக்கங்களை வைத்தே நாம் நியாயந்தீர்க்கப்படுவோம்.

**மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்; கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார் (நீதிமொழிகள் *21:2*).**

**மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. ஆகையால்**



**நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும், வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு *6:1,2*).**

இயேசு கிறிஸ்துவின் கால கட்டத்தில், மதத் தலைவர்கள், வார்த்தையை ஒத்தே காரியங்களைச் செய்தார்கள். ஏழைகளுக்குக் கொடுத்தார்கள். ஆனால், அவர்கள் இருதயம் கர்த்தரோடு இருக்கவில்லை. அவர்கள் செய்தது கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்காக அல்ல. அவர்கள் ஜனங்களின் அங்கீகாரத்தையே விரும்பினர். மேலும், அவர்களது நல்ல செயல்களை எல்லோரும் காணவேண்டுமென்பதற்காக செய்தார்கள். அவர்களது உண்மையான நோக்கம், ஜனங்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென்பதே, ஏழைகளுக்கு உதவ வேண்டுமென்பது அல்ல. இயேசு கிறிஸ்து சொன்னதுபோல, இப்படிப்பட்ட ஜனங்கள் ஒருபோதும் தேவனிடமிருந்து பலன்பெற மாட்டார்கள்.

**அவர் கண்ணேறிட்டுப் பார்த்தபோது, ஐசுவரியவான்கள் காணிக்கைப் பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார். ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதையும் கண்டு: இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப்பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (லூக்கா *21:1-3*).**

ஒருநாள், இயேசு கிறிஸ்து, ஜனங்கள் ஆலயத்திற்கு காணிக்கை கொடுப்பதை கவனித்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு மனிதனும் எவ்வளவு போடுகிறான் என்பது அவருக்குக் காரியம் அல்ல. மாறாக ஜனங்கள் அவர்களது நோக்கத்தை வைத்து நியாயந் தீர்க்கப்பட்டார்கள். சந்தோஷமாகக் கொடுப்பவனை கர்த்தர் நேசிக்கிறார். எல்லோரைக் காட்டிலும் குறைவாகவே அந்த விதவை போட்டாள். ஆனால், அவள் தனது ஜீவனத்திற்கென்று வைத்திருந்த எல்லாவற்றையுமே கொடுத்ததால், அவள் கொடுத்ததையே இயேசு கிறிஸ்துவால் மிக உயர்வாகக் கருதப்பட்டது. நிச்சயமாக, அந்த விதவை மற்ற எல்லா பணக்காரர்களைக் காட்டிலும் மிகுந்த மேன்மையான பலனைப் பெற்றிருப்பாள்.

இயேசு கிறிஸ்துவின் கால கட்டத்தில், ஜனங்கள், மாய்மாலமான மதத் தலைவர்களான பரிசேயர், சதுசேயரை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேச துணிவில்லாமல் இருந்தார்கள். அந்த சூழ்நிலை அதிர்ச்சி தருவதாய் இருந்தது, குருடன், குருடனை வழிநடத்திக் கொண்டிருந்தான். இதற்கு மாறாக, இயேசு கிறிஸ்து பயப்படாமல் வெளிப்படையாகவும், புரட்சிகரமாகவும் பேசுபவராக இருந்தார். ஏனென்றால், தமது பிதாவை மாத்திரமே பிரியப்படுத்த முயற்சித்தார். பரிசேயரும், சதுசேயரும், அவர் சொன்ன எல்லாவற்றையும் குற்றப்படுத்துவதிலேயே இருந்தார்கள். ஏனென்றால், இயேசு கிறிஸ்து அவர்களுடைய இருளில் செய்யும் வேலைகளை வெளிப்படுத்தினார். ஆனால், மாய்மாலம் இல்லாத சிலர் மாத்திரம் மகிழ்ச்சியோடு அவரது வார்த்தைகளை ஏற்றுக் கொண்டார்கள்.

மதம்சார்ந்த சமுதாயத்தின் குறைகளை அவர் வெளிப்படுத்தினார். அவரது பிதா, அவரை அனுப்பின பணியில் இருந்தார். மேலும், ஒரு மனிதனையும் பிரியப்படுத்த அவர் முயற்சிக்கவில்லை. அவர்களை, 'விரியன் பாம்புக் குட்டிகளே' என்றும், 'வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைச் சுவரே' என்றும் அழைத்தார். அவர் பல சாட்டைகளினால் ஒரு உறுதியான தடித்த கயிறை செய்து, அவருடைய வீடான ஆலயத்தில் விற்பவர்களை துரத்தினார். இது ஏனென்றால்,சுற்றி நடப்பவை மற்றும் சூழ்நிலை எப்படியிருப்பினும், இயேசு மற்றும் அவரது சீடர்களின் மிகவும் தீவிரமான வைராக்கியமான கீழ்ப்படிதலே. இது மாய்மாலமான மதத் தலைவர்களால் விதிக்கப்பட்ட போலியான மதத்திற்கு ஒரு முடிவைக் கொண்டு வந்தது. மேலும், புது யுகமான சுதந்திரத்தை கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களுக்குக் கொண்டு வந்தது.



**வெளியரங்கமாகாத இரகசியமுமில்லை, அறியப்பட்டு வெளிக்குவராத மறைபொருளுமில்லை (லூக்கா 8:17)**

**.. நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள் (2 பேதுரு 3:14).**

நம்மிடம் இயேசு கிறிஸ்து எதை எதிர்ப்பார்க்கிறாரென்றால், மாய்மாலமற்ற தன்மையே. நாம் கர்த்தரோடு நடப்பது உண்மையானதா அல்லது மற்றவர்கள் நம்மை நல்லவர்கள் என்று நம்பி பார்க்க வேண்டுமென்பதற்காகவா என்பதை சோதித்து அறிவது அவசியம். நாம் உண்மையான விசுவாசிகளாகக் கண்டிப்பாக இருந்து, இயேசுவைப் போல இருளில் நடப்பவைகளை வெளிப்படுத்த வேண்டும். மேலும், தேவனிடமிருந்து மாத்திரம் பாராட்டைத் தேட வேண்டும்.



# தீர்க்கதரிசியும் தீர்க்கதரிசனமும்



- பால்ராஜ் கென்னடி

**தொடர்ச்சி...**

### 12. ஆவியில் பெலன்-விசுவாசம்

ஆவியில் பெலன்கொள்வது-நமது உணர்ச்சிகள், நம்மை ஆட்கொள்ளாதபடி, நமது ஆவியில் உள்ள விசுவாசத்தில் பெலன்கொள்வதே. வேதத்தை அதிகமாகப் படிக்க வேண்டும். அது, நமது விசுவாசத்தை வர்த்திக்கச் செய்யும். விசுவாசம், நமது உணர்ச்சிகள் (பயம், கலக்கம், குழப்பம், கோபம், இரு மனம், சந்தேகம்..) நம்மை ஆட்கொள்ளாதபடி, கட்டுப்படுத்தும். விசுவாசம், கர்த்தரின் வழிநடத்துதலை நமக்கு கற்றுத் தரும். அதிலே உறுதியைத் தரும். ஒருபோதும் நாம் உணர்ச்சிகளுக்கு அடிபணியக் கூடாது. கர்த்தரோடு நமக்கு உள்ள உறவே ஆவியில் பெலன்கொள்வதாகும். அது, விசுவாசமே. அந்த விசுவாசத்தைத் தருபவர் இயேசு கிறிஸ்துவே. அதை வேதத்தின் வார்த்தை மூலமேத் தருகிறார்.

### 13. தீர்க்கதரிசி-அங்கீகாரம்

இயேசு கிறிஸ்து, மாம்சத்தில் வந்த தேவன். அவர், ஆண்டவர். அவர் தம்மை, வேதத்தில் தீர்க்கதரிசி என்று குறிப்பிடுகிறார். அப்படியென்றால் தீர்க்கதரிசி என்னும் ஸ்தானம் எவ்வளவு உயர்ந்தது என்பதை உணர முடிகின்றது. ஆனால், அவர் வளர்ந்த ஊரில் அவரை ஒரு தீர்க்கதரிசியாகக் கனப்படுத்தவில்லை என்று குறிப்பிடுகிறார். எலியா, எலிசாவை வேறு இடங்களுக்கு அனுப்பினேன் என்று கூறுகிறார். எந்த தீர்க்கதரிசியும் தன்னுடைய சொந்த வீட்டில், ஊரில் அங்கீகரிக்கப்பட மாட்டான் என்பதை ஒவ்வொரு தீர்க்கதரிசியும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு மனுஷனுக்குள் கர்த்தர் பேசுகிறார். அதை அவன் தீர்க்கதரிசனமாகச் சொல்லுகிறான். அவனது தீர்க்கதரிசனத்தை அவனது வீட்டில், ஊரில் கேட்கவில்லை, அங்கீகரிக்கவில்லை என்பதால், கர்த்தர் அவனுடன் பேசவில்லை என்று அர்த்தமல்ல. அவர்கள், பரிசுத்த ஆவியானவரைப் பார்க்கவில்லை, அவனைத்தான் பார்க்கிறார்கள் என்று அர்த்தம்.

தீர்க்கதரிசி செய்யவேண்டிய ஒரே காரியம், கர்த்தர் வாயைத் திறந்து பேசு என்று சொல்லும்போது பேச வேண்டும். எந்த வீடு, எந்த ஊர் என்று பார்க்கத் தேவையில்லை. கர்த்தர் பேசாதே என்று சொல்லும்போது, தீர்க்கதரிசனம் சொல்லக்கூடாது. முழுமையாக கர்த்தருடைய கட்டுப்

பாட்டில் ஒரு அடிமையைப்போல இருந்தால் போதும்.

***14. ஒரு தீர்க்கதரிசி எப்படி இருக்க வேண்டும்?***

ஒருவர் நமக்கு தீர்க்கதரிசனம் சொல்லும்போது நாம் கவனிக்க வேண்டியக் காரியங்கள்: 1. அவருக்கும் கர்த்தருக்குமிடையே உள்ள உறவு எப்படிப்பட்டது என்பதை அறியவேண்டும். அவரது ஜெபம், துதி, ஆராதனை, பேச்சு, பிரசங்கம் அதைக் காட்டும். தான் ஒரு மனிதன்தான், கர்த்தர்தான் தெய்வம் என்பது அவரிடத்தில் காணப்பட வேண்டும். அதுதான் தாழ்மையாகும். கர்த்தரைக்குறித்து அவராக சொந்தமாகச் சொல்லாமல், வேதத்திலிருந்து கர்த்தர் செய்த காரியங்களை வைத்து சொல்பவராக இருக்க வேண்டும். எளிமை அவரிடத்தில் இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து, எளிமையாகவே இருந்தார். வெளிபுறமானக் காரியங்களை, பணம், படிப்பு, புகழ், வீடு, ஆஸ்தி, மனிதனின் நிறம், பதவி, பொருட்களை மேன்மையாகப் பேசாமல், சமாதானம், பெற்றோரின் மேன்மை, வேதத்தின் முக்கியத்துவம், கர்த்தரோடு ஒரு மனிதனுக்குள்ள ஐக்கியம், தாழ்மை, புத்தி இவைகளைப்பற்றிப் பேசுபவராகவும், அவற்றை முக்கியப்படுத்தி, மேன்மைப்படுத்தி பேசுபவராகவும் இருக்க வேண்டும். 2. அவருடைய வாழ்க்கையில் நாம் இயேசுவைக் காண வேண்டும். இயேசு சொல்கின்ற விதத்தில் வாழ்பவராக இருக்க வேண்டும். 3. தீர்க்கதரிசிக்கும், தீர்க்கதரிசன ஆவிக்குமிடையே உள்ள வித்தியாசத்தைத் தெரிந்தவராக இருக்க வேண்டும். தீர்க்கதரிசன ஆவியுடையவன், தீர்க்கதரிசிபோல் பேசவோ, செயல்படவோ கூடாது. தீர்க்கதரிசன ஆவியையுடையவனைவிட தீர்க்கதரிசி மேன்மையானவன். தீர்க்கதரிசி என்பவன், கர்த்தரோடு முகமுகமாய் (சம்பாஷணை) பேசுபவன். தீர்க்கதரிசி சொல்வதை கர்த்தர் அப்படியே நிறைவேற்றுவார். அவன், தீர்க்கதரிசியாக கர்த்தரால் அபிஷேகிக்கப்பட்டு,அழைக்கப்பட்டவன். 4. அவருடைய அர்ப்பணிப்பு. அவர் தன்னை கர்த்தருக்கு முழுமையாக அர்ப்பணித்திருந்தால், சொந்த அபிப்பிராயத்தை, கருத்தை சொல்ல மாட்டார். கர்த்தர் சொல்வதை மாத்திரமே சொல்வார். மனிதரை பிரியப்படுத்தும்படி பேசமாட்டார். கர்த்தருக்குப் பிரியமானதையே பேசுவார். மனிதர்களையோ, அவர்களுடைய பணத்தையோ பார்க்க மாட்டார். மனிதர்களை நம்பி வாழ மாட்டார். கர்த்தரையே முழுமையாக நம்பி இருப்பார். 5. அவருடைய விசுவாசம். அவர், எல்லாவற்றுக்கும் கர்த்தரையே நம்பி இருப்பார். அவரிடத்தில் இருப்பதெல்லாம் கர்த்தர் தந்தவையாக இருக்கும். நம்மிடத்தில் விசுவாசத்தை மிகவும் முக்கியப்படுத்தி கருத்து தெரிவிப்பவராக இருப்பார். இந்த விசுவாசமே நம்மை கர்த்தரை நெருங்க வைப்பதாகும். இது மிகவும் அவசியமாகும். 6. அவருடைய அன்பு. கர்த்தரை மிகவும் அதிகமாக நேசிக்கிறவராக இருப்பார். இரட்சிப்பை பிரதானமாகக் கருதுவார். அவரது பேச்சு, நம்மை கர்த்தருடைய அன்பை நோக்கிப் பார்க்க வைக்கும். கர்த்தருடைய அன்பு நம்மை ஆட்கொள்ளும். அவரைப் பார்க்க மாட்டோம், கர்த்தரையே நோக்கிப் பார்ப்போம். இயேசுவின் அன்பு நம் உள்ளத்தை நிரப்பும். நம்முடைய இருதயத்தின் காயங்களிலெல்லாம் இயேசுவின் அன்பு மருந்தாக வந்து ஆற்றிப் போடும். நம்மிடமுள்ள குறைகள், கசப்புகள் எல்லாம் நம்மைவிட்டு அகலும். 7. அவரது ஆவியையும், ஆத்துமாவையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பார். அதனால் நிதானமாக இருப்பார். உணர்ச்சிவசப்பட மாட்டார். அதிகமாக கண்ணீர் விடவோ, சந்தோஷப்படவோ, சத்தமிடவோ மாட்டார். எல்லாமே கட்டுப்பாட்டில் இருக்கும். கர்த்தர் எவ்வளவாய் மனதுருகுகிறாரோ அதை மாத்திரமே வெளிப்படுத்துவார். கர்த்தருடைய உணர்வுகளை வெளிப்



படுத்துவார். தனது மாம்சத்தில், ஆத்துமாவில் சுயமாக உணர்ச்சிவசப்பட மாட்டார். தீர்க்கதரிசனம் சொல்வதில் ஒரு தெளிவு இருக்கும். குழப்பம் இருக்காது. நம்மை பயப்படுத்தும்படியாக, கலங்கப் பண்ணுவதாக இருக்காது. எச்சரிக்கை இருக்கும். 8. கர்த்தருடைய வார்த்தைக்கு நேராக (யாராக இருந்தாலும்) நடத்துபவராக இருக்க வேண்டும். வேதத்தை அனுதினமும் தியானிக்க நமக்கு அறிவுருத்துபவராக இருக்க வேண்டும். 9. தாம் ஜெபிக்கும்போது தரிசனத்தைப் பெற்றால், அதை சரியாக வியாக்கியானம் பண்ணுபவராக இருக்க வேண்டும். ஒருவேளை தரிசனம் கண்டு அதை புரிந்துகொள்ள இயலவில்லையென்றால், அந்த தரிசனத்தை சொல்பவராக இருக்கக் கூடாது. 10. அதிகமாக உபவாசிப்பவராக, வேதத்தைத் தியானிக்கிறவராக, வெளிப்பாடுகள் உள்ளவராக இருக்க வேண்டும். 11. அவர் பேசும்போது நமக்குள் ஒரு பெரிய வெளிச்சம் உண்டாவதைக் காணலாம், உணரலாம். நமது ஆவியில் ஒரு உறுதி ஏற்படும். கர்த்தர்மேல் இதுவரை இருந்ததைவிட இன்னுமாக வைராக்கியம் ஏற்படும். 12. தன்னுடைய குடும்பத்தை நன்கு விசாரிப்பவராக இருக்க வேண்டும். முதலாவது, குடும்பத்திற்கு ஊழியம் செய்ய வேண்டும். ஏனென்றால், கர்த்தர் தந்த மனைவி, பிள்ளைகளுக்கு தன்னுடைய கடமையை கணவனாக, தகப்பனாக செய்ய வேண்டும். அதன்பிறகுதான் மற்றவர்களுக்கு ஊழியம். 13. ஒருவேளை கர்த்தர் எதையும் வெளிப்படுத்தவில்லையென்றால், அதை வெளிப்படையாகச் சொல்பவராக இருக்க வேண்டும். 14. புத்திசாலித்தனமாக யோசித்து, கற்பனை செய்து சொல்லக் கூடாது. அது அவர்களையும், அவர்களது வாழ்க்கையையும் பாதித்துவிடும். 15. நல்ல தகவல் தொடர்பு இருக்க வேண்டும். யாருக்கு தீர்க்கதரிசனம் சொல்லுகிறோமோ, அவர்களுக்கு புரிந்துகொள்ளும்படி சொல்லும் திறன் அவசியம். எப்படி சொன்னால் அவர்களுக்குப் புரியுமோ அப்படி சொல்ல வேண்டும். 16. ஞானம் அவசியம். முதலாவது கர்த்தர் சொல்வதை சரியாக புரிந்துகொள்ள வேண்டும். பின்னர் அதை ஜனங்களுக்கோ, குடும்பத்திற்கோ, தனி மனிதனுக்கோ சொல்லும்போது, சூழ்நிலையை சரியாகப் புரிந்துகொண்டு சொல்ல வேண்டும். யோசித்து, பின்னர் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டும். யாரையும் மற்றவர்கள்முன்பாக வெட்கப்படுத்தி, கர்த்தருடைய சமூகத்தை விட்டு நீங்கிப் போகும்படியாக செய்துவிடக் கூடாது. சபையில் சொல்வதை சபையில் சொல்ல வேண்டும். தனித்து சொல்வதை தனித்து சொல்ல வேண்டும்.

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

**உள்நாட்டு வருட சந்தா** ரூ. 200/-

**வெளிநாட்டு வருட சந்தா** ரூ. 2000/-

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா